# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 134/மா/2023**
**நாள் : 10.08.2023**

திரு. L. மாரியப்பன்,
சேலம் - 636 005. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
சூரமங்கலம் வார்டு அலுவலகம்,
சேலம் மாநகராட்சி – எதிர்மனுதாரர்

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் போஸ்ட், சோளம்பள்ளம், கட்டுசோத்தான்வளவு, கதவு எண்.56 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. L. மாரியப்பன் என்பவரது 24.04.2023 நாளிட்ட மனு, 27.04.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 134/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் போஸ்ட், சோளம்பள்ளம், கட்டுசோத்தான்வளவு, கதவு எண்.56 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. L. மாரியப்பன் என்பவர் தனது 24.04.2023 நாளிட்ட மனுவில் பின்வருமாறு புகார் தெரிவித்துள்ளார்.

சேலம், சூரமங்கலம் பகுதியில்

1. ராஜீவ் நகர் தூய்மை இந்தியா திட்ட கழிப்பிடம் (மத்திய அரசு) சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம் 21வது டிவிசன், அரியாக்கவுண்டம்பட்டி.
2. M.G.R. நகர்
3. காளியம்மன் நகர்
4. சோளம்பள்ளம் நுழைவு வாயில்
5. சோளம்பள்ளம் ஆவிவாயன் முருகன் கோவில் அருகில்

ஆகிய நவீன கழிப்பிடங்கள் பொது மக்களுக்காக மாநகராட்சியால் கட்டப்பட்டது ஆகும். பொது மக்கள் இலவசமாக பயன்படுத்த கட்டப்பட்டது. ஆனால் பொதுமக்களிடம் கடந்த 15 வருடங்களாக இதற்காக கட்டணம் வசூல் செய்கிறார்கள். சமூக ஆர்வலராகிய நான் இது குறித்து பலமுறை நேரடியாகவும், எழுத்து மூலமாகவும் 17.12.2022 புகார் அளித்துள்ளேன். கட்டணம் வசூல் செய்யும் மாநகராட்சி பணியாளர் P. கிருஷ்ணன் என்பவர், தான் வசூல் செய்யும் பணத்தை, தான் மட்டும் வைத்து கொள்வதில்லை,

1. மேஸ்திரி K. குணசேகரன்
2. SI பிரகாஷ் (சுகாதார அலுவலர்)
3. SO மணிகண்டன்
4. M. செல்வராஜ் (சூரமங்கலம் மண்டல AC)

ஆகிய அனைவருக்கும் பங்கு பிரித்து அளிப்பதாக கூறுகிறார். 1 கழிப்பிடத்திற்கு 1 நாளுக்கு ரூ.500/- வசூல் ஆகிறது. 5 கழிப்பிடத்திற்கும் 5 x 500 = ரூ.2500 வசூல் ஆகிறது. மாதம் ரூ.75,000/- ஒரு வருடத்திற்கு ரூ.9,00,000/- 15 வருடங்களுக்கு இதை கணக்கிட்டால் தொகை கோடியில் வருகிறது. இது குறித்து நான் கேட்டதற்கு பணம் வசூல் செய்யும் கிருஷ்ணன், மேஸ்திரி K. குணசேகரன் ஆகிய இருவரும் எனது வீட்டிற்கு வந்து எனக்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள்.

மேலும் அருகிலுள்ள மல்லமூப்பன்பட்டி பஞ்சாயத்துக்கு உட்பட்ட ராதாகிருஷ்ணன் திருமண மண்டபத்தில் மாநகராட்சி வண்டியை (TN 30-B00609) கொண்டு கடந்த 2 வருடமாக குப்பை அள்ளி வருகிறார்கள். மாநகராட்சி வண்டி என்பது மாநகராட்சி பயன்பாட்டில் உள்ளது. அதனை விதிகளை மீறி ஊராட்சி பணிகளுக்கு பயன்படுத்தியது சட்ட விரோதம். அதற்கு தனியாக மேஸ்திரி K. குணசேகரன் லஞ்சம் பெறுகிறார் மற்றும் அதே ஊரில் நிலாச்சோறு எனும் ஒட்டலில் மாநகராட்சி பணியாளர் செல்லப்பன் என்பவர் இலை எடுத்து வருகிறார்.

ஆகையால் மேற்படி 21வது டிவிசனில் இதுபோல் பல்வேறு முறைகேடுகள் நடந்து வருகிறது. எனவே இதில் தொடர்புடைய SI பிரகாஷ், SO மணிகண்டன், M. செல்வராஜ் (சூரமங்கலம் மண்டல AC) மேஸ்திரி K. குணசேகரன் P. கிருஷ்ணன் ஆகிய அனைவர் மீதும் தக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, சேலம் மாநகராட்சி ஆணையாளரிடம் 23.5.2023 அன்று கோரப்பட்டது. சேலம் மாநகராட்சி ஆணையர் தனது 23.6.2023 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார் :**

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட கோட்டம் எண்.21ல், திரு. L. மாரியப்பன் த/பெ. லட்சுமணன், 56 கட்டுச்சோத்தான் வளவு, சூரமங்கலம், சேலம் என்பவர் நவீன கழிப்பிடங்கள் பொதுமக்களுக்காக மாநகராட்சியால் இலவசமாக கட்டப்பட்டது என்றும் ஆனால் பொதுமக்களிடம் கடந்த 15 வருடங்களாக இதற்காக கட்டணம் வசூல் செய்கிறார்கள் என புகார் மனு சமர்ப்பித்துள்ளதன் பேரில் இவ்வலுவலக 21வது கோட்டம் சுகாதார ஆய்வாளர்

(திரு.க. பிரகாஷ்) அவர்களால் மேற்படி இடத்தினை நேராய்வு செய்ததில், மேற்படி புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எந்த சமூக கழிப்பறையிலும் மாநகராட்சி பணியாளர் (கிருஷ்ணன்) மூலம் எந்தவித கட்டணமும் வசூலிக்கப்படவில்லை எனவும், தொகை வசூல் செய்து மற்ற அலுவலர்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்டது என புகார் மனுதாரர் பொய்யான புகார் தெரிவித்துள்ளார் எனவும், விசாரணையில் தெரியவருகிறது என கூறியுள்ளார். சேலம் மாநகராட்சி கோட்டம் எண்.21ல் உள்ள புது ரோடு, ஸ்கூல் பிளாண்ட் ரோடு, சோளம்பள்ளம் பகுதி மாநகராட்சி மற்றும் மல்லமூப்பம்பட்டி பஞ்சாயத்து பகுதி எல்லை பிரிவாகும். இந்த மெயின்ரோடு இடதுபுறம் மாநகராட்சியும் வலது புறம் பஞ்சாயத்து பகுதியாகும். தினசரி மாநகராட்சி வாகனம் மாநகராட்சிக்கு சம்மந்தப்பட்ட இடதுபுறம் பகுதிகளில் குப்பைகளை சேகரித்துக்கொண்டு மீண்டும் வலதுபுறம் திரும்பி மாநகராட்சி எல்லை பகுதிக்கு வந்து சேரும். இதனை மனுதாரர் தவறாக புரிந்து கொண்டு பொய் புகார் தெரிவித்துள்ளார் என்றும் மனுதாரர் மீது மாநகராட்சியில் பணியாற்றும் மேற்பார்வையாளரை தாக்கியதாகவும் அரசு பணி செய்யவிடாமல் தடுத்தல் சம்பந்தமாகவும் சூரமங்கலம் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்றும் மேற்படி புகார் வழக்கில், தூய்மை பணியாளர் திரு. செல்லப்பன் என்பவர் இவ்வழக்கில் சாட்சியாக உள்ளார் எனவும் அதனடிப்படையில் மனுதாரர் மறைமுகமாக அச்சுறுத்தல் செய்து பலவிதமாக பொய் புகார் மனுக்கள் அனுப்பி வருகிறார் என்றும் திரு. P. கிருஷ்ணன் தூய்மை பணியாளர் தூய்மை பணி செய்யும் பகுதியில் சம்பந்தப்பட்ட சமுதாய கழிப்பறைகள் அமைந்துள்ளது என்றும் இக்கழிப்பறைகளை சுத்தம் செய்யும்போதும் உள்ளே சென்று வரும் போதும் புகார் மனுதாரர் செல்போனில் புகைப்படம் எடுத்து பதிவு செய்து தூய்மை பணியாளர்களை தொந்தரவு செய்து வந்துள்ளார் என்பது விசாரணையில் தெரிய வருகிறது என்றும் மனுதாரர் தொடர்ந்து புகார் தெரிவிப்பதால், பொது மக்கள் அறியும் வகையில் ஒவ்வொரு சமுதாயக் கழிப்பறையிலும், இந்தக்கழிப்பறை, "கட்டணம் இல்லா கழிப்பறை" என அறிவிப்பு பலகை, புகார் தெரிவிக்க "க்யூ ஆர் கோடு" மற்றும் தொலைபேசி எண் குறிப்பிட்ட பலகை வைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி பொருள் தொடர்பாக, புகார்தாரர் திரு. L. மாரியப்பன் மாண்புமிகு முதலமைச்சர் தனிபிரிவிற்கும் மின்னஞ்சல் மூலம் புகார் சமர்ப்பிக்கப்பட்டதின் பேரில், இவ்வலுவலகம் மின்னஞ்சல் மூலம் பதில் தகவல் அனுப்பப்பட்டுள்ளது எனவும் மேற்படி புகார் மனு மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரங்களை பரிசீலித்து நடவடிக்கை ஏதும் தொடர வேண்டாம் எனவும் பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்."

**இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 13.07.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 12.7.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 13.7.2023 அன்று இம்முறைமன்றத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

**சேலம் மாநகராட்சி மண்டலம் 1ன் சுகாதார ஆய்வாளர் 13.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் கட்டுச்சோத்தான் வளவு என்கின்ற இடத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கான கழிப்பிடம் உள்ளது. மேற்கண்ட கழிப்பிடத்தை பொதுமக்கள் இலவசமாக பயன்படுத்தி வருகின்றனர் எனவும், அங்கு எவ்வித கட்டணமும் வசூலிக்கப்படவில்லை எனவும் மேலும் மேற்கண்ட கழிப்பிடத்தின் முகப்பில் " இலவச கழிப்பிடம்" என பலகை வைக்கப்பட்டுள்ளது எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் இம்முறை மன்றத்தில் மனு அளிப்பதற்கு 3 வருடங்களுக்கு முன்பாகவே அதாவது 18.7.2019 அன்று, மனுதாரர் மாநகராட்சி அலுவலரை தரக்குறைவாக பேசியது தொடர்பாக சேலம் சூரமங்கலம் காவல் நிலையத்தில் FIR போடப்பட்டு, வழக்கு தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மேற்கண்ட வழக்கை வாபஸ் வாங்கக்கோரி மனுதாரர் திரு மாரியப்பன் மாநகராட்சி அலுவலர்களை வலியுறுத்தினார். மேற்கண்ட வழக்கை மாநகராட்சியால் திரும்பப் பெறாத நிலையில் மனுதாரர் மாநகராட்சி அலுவலர்களை மிரட்டியும், பொய்யான புகார் மனுக்களையும் அனுப்பி வருகிறார் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சேலம் மாவட்டம் சூரமங்கலம் உதவி ஆணையரின் 23.6.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொண்டு, இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்."

**மனுதாரர் 24.7.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு எழுத்து வடிவில் சமர்ப்பித்துள்ளார்:–**

21வது கோட்டத்தில் தூய்மை பணியாளராக பணியாற்றும் காளியம்மாள் க/பெ. மாணிக்கம் தினசரி கையொப்பம் இட்டு சென்று விடுவார் எங்கு வேலை செய்கிறார் என்பது தெரியவில்லை 23 ஆண்டுகளாக பணி செய்யவில்லை. கீழே உள்ள பெண்கள் 6 பேர் மேற்பார்வையாளர் ஆசை வார்த்தைக்கு உட்பட்டு நடக்க வேண்டும். இல்லையெனில் அவர்களுக்கு இன்று வேலை இல்லை நாளை வா என்று சொல்லிவிடுவார்கள். இவர்களுடைய ஆசை வார்த்தைக்கு இடம் புதுரோடு அருகில் உள்ள சுடுகாடு என்பதால் பொது மக்களுக்கு நன்று தெரியும் என்பதை அருகில் உள்ள மக்களே கூறுவார்கள். இது தவிர லீவு எடுத்தால் லீவு போடாமல் கையெழுத்து வாங்கிக் கொண்டு எத்தனை நாள் என கணக்கிட்டு ஒரு நபருக்கு ரூ.500/– வீதம் பெற்றுக்கொள்கிறார்கள் அதில் ரூ.10,000/- கிடைக்கும்.

| <u>பெண் நிரந்தர ஊழியர்கள்</u> | <u>குழு உறுப்பினர்கள்</u> |
|---|---|
| 1. சந்திரா க/பெ. முருகன் ரூ.1000/- | 1. பழனியம்மாள் ரூ.500/– |
| 2. போதம்மாள் க/பெ. ராஜி, ரூ.1000/– | 2. தமிழரசி ரூ.500/– |
| 3. காவேரி க/பெ.முருகன் ரூ.1000/- | 3. ஜான்சி ரூ.500/- |
| 4. மணி க/பெ.தங்கவேல் ரூ.10,000 (வேலைக்கு வராதவர்) | 4. சங்கீதா ரூ.500/- |
| 5. ஈஸ்வரி க/பெ. அப்பு ரூ.10,000 (வேலைக்கு வராதவர்) | 5. லட்சுமி ரூ.500/- |
| 6. நதியா க/பெ தேவராஜ் ரூ.6000 (வேலைக்கு வராதவர்) | 6. அம்பிகா ரூ.500/- |
| 7. மாதம்மாள் ரூ.6,000 (வேலைக்கு வராதவர்) | |
| 8. காளியம்மாள் ரூ.1000 | |
| 9. முனியம்மாள் | |

| | |
|---|---|
| A. கண்ணன் த/பெ. ஆறுமுகம் | ரூ.10000/- (வேலைக்கு வராதவர்) |
| 1. பாண்டியன் | ரூ.10000/- (வேலைக்கு வராதவர்) |
| 2. சரவணன் | ரூ.1000/– |
| 3. A. வெங்கடேசன் | ரூ.1000/– |
| 4. M. வெங்கடேசன் | ரூ.1000/– |
| 5. கணபதி | ரூ.1000/- |
| 6. செல்லப்பன் | ரூ.1000/- |
| 7. அல்லுமுத்து (மாற்று பணி) | |
| 8. முருகன் (மாற்று பணி | |
| 9. சுரேந்திரன் | |
| 10. முருகன் | |
| 11. மாதையன் (பணிக்கே வருவதில்லை) | |
| 12. ஞானசுந்தரம் (மாற்று பணி) | |

<u>மேற்பார்வை ஊழியர்கள்</u>

1. K. குணசேகரன் மேஸ்திரி
2. P. கிருஷ்ணன் த/பெ. பெருமாள்
3. M. காவேரி க/பெ. முருகன்
4. R. போதம்மாள் க/பெ. ராஜி
5. A. சங்கீதா க/பெ. ஆனந்தன்
6. M. சந்திரா க/பெ. முருகன்

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், சேலம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

சேலம், சூரமங்கலத்தைச் சேர்ந்த திரு. L. மாரியப்பன், சூரமங்கலம் மண்டலத்தில் கட்டப்பட்டுள்ள இலவச நவீன கழிப்பிடங்களுக்கு, சேலம் மாநகராட்சி பணியாளர் திரு. P. கிருஷ்ணன், கட்டணம் வசூல் செய்வதாகவும், இது குறித்து புகார் மனு அளித்தும்

எந்தவித நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால், சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டல அலுவலர்கள் மீது உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார். மேலும் இந்நேர்வு தொடர்பாக புகைப்பட மற்றும் காணொலி ஆதாரங்களையும், பொது மக்கள் அங்குள்ள இலவச கழிப்பிடத்தை காசு கொடுத்து பயன்படுத்தி வருகின்றனர் என்பதை தெரிவித்து புகார் மனு உதவி ஆணையருக்கு அளித்துள்ளதையும் தெரிவித்து, அப்புகார் மனுவின் நகலினையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

2. மனுதாரர் குறிப்பிட்ட நவீன கழிப்பிடங்களை பொது மக்களுக்காக இலவசமாக சேலம் மாநகராட்சியில் கட்டப்பட்டன என்பதும், கழிப்பறைக்கு எவ்வித கட்டணமும், வசூல் செய்யப்படவில்லை என்பதும், கழிப்பிடங்களின் முகப்பில், "இலவச கழிப்பிடம்" என்ற பலகை வைக்கப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர், சேலம் மாநகராட்சி ஊழியர்களை 2014ஆம் ஆண்டு தரக்குறைவாக பேசியது தொடர்பாக சூரமங்கலம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு இருப்பதும், சேலம் மாநகராட்சியின் உதவி ஆணையரின் அறிக்கையிலும் சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளார்.

3. ஆனால் சேலம் மாநகராட்சி MGR நகரில் உள்ள கழிப்பிடத்திற்கு முன்புறம் சிறு பந்தல் அமைத்து கட்டணம் வசூல் பண்ணும் புகைப்பட நகலினை மனுதாரர் சமர்ப்பித்துள்ளதை பார்வையிடும் போது, மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போன்று சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்தில் உள்ள இலவச கழிப்பிடங்களுக்கு முறைகேடாக கட்டணம் வசூல் செய்வது தெளிவாகத் தெரிகிறது. மேலும், சேலம் மாநகராட்சி சூரமங்கலம் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும், சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மனுதாரரின் மீது 2019-ஆம் ஆண்டு FIR வழக்கு பதிவு செய்ததன் காரணமாக மூன்று ஆண்டுக்கு பிறகு அதாவது 2022-ம் ஆண்டு சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டல அலுவலர்கள் மீது பொய்யான புகார் அளித்துள்ளார் என்ற வாதம் ஏற்புடையதல்ல.

4. மனுதாரர் அளித்த புகார் மனு மற்றும் சூரமங்கலம் உதவி ஆணையருக்கு பொது மக்கள் அனுப்பியுள்ள நாளிடப்படாத மனுவில் உள்ள சில நபர்களிடம் தொலைபேசி மூலம் விசாரித்ததன் மூலம் சேலம் மாநகராட்சியின் சூரமங்கலம் மண்டல அலுவலர்கள் இலவசமாக கட்டப்பட்ட நவீன கழிப்பிடங்களுக்கு முறையற்ற முறையில் கட்டணம் வசூல் செய்து இருப்பது, சேலம் மாநகராட்சியில் சூரமங்கலம் மண்டல அலுவலகத்தைச் சார்ந்த சம்மந்தப்பட்ட பணியாளர்கள் பணியில் நேர்மையற்றவர்களாக உள்ளனர் என்பதை இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. புகார்தாரர் தன்னுடைய மனுவில் பட்டியலிட்டுள்ள பொது மக்களில் சிலரை அலைபேசியில் தொடர்பு கொண்டபோது இம்முறைமன்றத்திற்கு மனு அளித்த பின்னர் மாநகராட்சி பணியாளர்கள் கட்டணம் ஏதும் வசூலிக்கவில்லை என தெரிவித்திருப்பது மிகவும் வருத்தம் அளிப்பதாக உள்ளது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

மனுதாரர் இம்முறைமன்றத்திற்கு அனுப்பிய வீடியோ மற்றும் புகைப்படங்களை ஆய்வு செய்ததில், சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்தின் அனைத்து மட்டத்திலும்,

சம்பந்தப்பட்ட அலுவலர்களின் உடந்தையுடன் மேற்கண்ட இலவச கழிப்பிடங்கள் உபயோகிப்பதில் முறைகேடு நடைபெறுகிறது என்பது அறியமுடிகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு உதவும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்திவரும் நிலையில், அதற்கு முரண்பாடாக சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டல அலுவலர்களின் செயல்பாடுகள் உள்ளதாக இம்முறைமன்றம் கருதுகின்றது.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது குறிப்பாக:-

பிரிவு 7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely

(a) xx

(b) xx

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

மற்றும்

பிரிவு 12 (1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences in the following manner. namely:-

(a) xx

(b) xx

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) xx

(e) xx

மேற்கண்ட சட்டம் மற்றும் விதிகளின் அடிப்படையில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்தில் கட்டப்பட்டுள்ள இலவச நவீன கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூல் செய்தது தொடர்பாக, சம்பந்தப்பட்ட சூரமங்கல உதவி ஆணையாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களை பொறுப்பாக்கி அனைவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைத்தும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு 30 நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறு சேலம் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது. மேலும், சேலம் மாநகராட்சியின் எல்லா மண்டலங்களிலும் உள்ள இலவச கழிப்பிடங்களிலும் கட்டணம் வசூல் செய்வதை தடுக்க

"பறக்கும் படை" (Flying Squard) அமைத்து திடீர் சோதனை (Surprise Check) நடத்திடவும். அவ்வாறு கட்டணம் வசூல் செய்வோர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும், சேலம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மனுதாரரால் இம்முறைமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ள புகைப்படங்கள் உரிய நடவடிக்கைக்காக நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

2023-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. L. மாரியப்பன்,
S/o. லட்சுமணன்,
கதவு எண்.56, கட்டுசோத்தான் வளவு,
சோளம்பள்ளம், சூரமங்கலம் போஸ்ட்,
சேலம் - 636 005.

2) ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி,
சேலம் - 636 001.

3) உதவி ஆணையர்,
சூரமங்கலம் வார்டு அலுவலகம்,
சேலம் மாநகராட்சி, சேலம் - 636 005.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028. (இ)

5) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை-600 032

செயலாளர்